# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

## <u>இலங்கையின் பாலுற்பத்தி பண்ணையாளர்களுக்கான ஆளுமைவிருத்தி செயல்திட்டம்</u>

இலங்கையைச் சேர்ந்த பால் பண்ணை உற்பத்தியாளர்கள் 25 பேர் உள்ளடங்கிய பேராளர்கள் குழு ஒன்று விசேட பயிற்சி மற்றும் ஆளுமை விருத்தி செயல்திட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக 2025 டிசம்பர் 14 முதல் 20 ஆம் திகதி வரை இந்தியாவுக்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர். இலங்கை முழுவதும் உள்ள பால் பண்ணை உற்பத்தியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தி இப்பேராளர்கள் விஜயத்தினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது விடுத்திருந்த அறிவித்தலுக்கு அமைவாக இந்த நிகழ்ச்சி திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு வருடாந்தம் 700 பயிற்சி ஆசனங்களை ஒதுக்குவதற்கு இந்தியா தீர்மானித்திருந்தது.

2. இந்த நிகழ்ச்சி திட்டம் குஜராத்தின் ஆனந்தில் உள்ள தேசிய பால் பண்ணை மேம்பாட்டு வாரியத்தில் (NDDB) இந்திய அரசாங்கத்தால் ஒரு வார காலத்திற்கு நடத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த பால் பண்ணை உற்பத்தி வலையமைப்பினை உள்ளடக்கிய விரிவான தொழில்நுட்ப மற்றும் தொனிப்பொருள் ரீதியான அமர்வுகள் இங்கு இடம்பெற்றன. அத்துடன் விலங்குகளின் இனப்பெருக்கம், ஒட்டுமொத்த பால் பொருள் உற்பத்தி வலை அமைப்பின் தர உத்தரவாதம், பல்வேறுபட்ட விலங்குகளுக்கான உணவூட்டல் செயல்முறைகள், சமநிலைப்படுத்தப்பட்ட போசாக்கின் முக்கியத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த அமர்வானது நடைமுறை ரீதியான திறன்களை மேம்படுத்தல், தொழில்துறை வெளிப்பாட்டை வலுவாக்கல், நவீன உற்பத்தி திறன்களை உருவாக்கல் ஆகியவை தொடர்பாகவும் கவனம் செலுத்தி இருந்தது.

3. அனுபவ ரீதியான கற்றல் செயற்பாடுகளின் அங்கமாக இந்த பேராளர்கள் முக்கிய நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் நிலையங்களுக்கும் விஜயங்களையும் மேற்கொண்டிருந்தனர். இந்த விஜயங்கள் மூலமாக சமகால பாலுற்பத்தி சூழல், நவீன உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் வளரும் சில்லறை மற்றும் விநியோக சங்கிலி செயற்பாடுகள் தொடர்பான பெறுமதியான உள்நோக்குகளை பெற்றுக்கொள்வதற்கும் வழி வகுத்திருந்தது.

4. தொழில்நுட்ப ரீதியான ஆளுமை விருத்திக்கு அப்பால், இப்பேராளர்கள் இந்தியாவின் வெற்றிகரமான பாலுற்பத்தி மாதிரிகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்த அதேவேளை, பண்ணைத் தொழில்

மேற்கொள்பவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஸ்திரமான பாலுற்பத்தி தொழில்முறைகளை கட்டி எழுப்புதல் தொடர்பாகவும் இப்பயிற்சி கவனம் செலுத்தியிருந்தது. அது மட்டுமல்லாமல் இந்த பயிற்சியானது வினைத் திறன் மிக்க பால்பண்ணை முகாமைத்துவம், சுத்தமான பாலுற்பத்தி சுகாதாரமான கையாளல் நடைமுறைகள் மற்றும் கால நிலைக்கு உகந்ததும் சுற்றுச்சூழலுக்கு அமைவானதுமான ஸ்திரமான அணுகுமுறைகள் தொடர்பில் இப்பேராளர்களின் திறன்களை மேலும் வலுப்படுத்தியது.

****

கொழும்பு
26 டிசம்பர் 2025